# தி.மு.க.வின் அரசியல் அலைகள் என்றும் ஓய்வதில்லை!

'யா'னைக் குழியில் விழுந்தால் எறும்புகூட எட்டி உதைக்குமாம்' என்றொரு பழமொழி உண்டு. கழகத் தலைவர் ஸ்டாலின் தமிழகத்தின் முதல்வராக இருந்த போது அவர் கடுமையாக உழைத்தார். தமிழ்ச் சமூகத்திலுள்ள அத்தனை பிரிவினருக்கும் சாதனைகளை நிகழ்த்திக் காட்டினார். நிறுவனமாக இல்லாத ஒரு தனி மனிதனின் 'அபிலாஷைகளை' பூர்த்தி செய்யும் வண்ணம் கடந்த 2026 தேர்தலில் வாக்களித்து தமிழகத்தில் ஒரு தொங்கு சட்டமன்றத்தை வாக்காளர்கள் ஏற்படுத்திவிட்டனர். த.வெ.க.வுக்கு முழுமெஜாரிட்டியை மக்கள் வழங்கவில்லை.

தி.மு.க.மக்களால்துடைத்தெறியப்படவில்லை. அதன் அணி 73 இடங்களைப் பெற்று இருக்கிறது. அதற்குத்தனித்து 59 இடங்கள் மக்களால் வழங்கப்பட்டு இருக்கின்றன. வாக்கு சதவிகிதம் 31.39 பெற்று இருக்கிறது. ஆனால் நாளேடுகள் என்ன தலைப்புப் போடுகின்றன தெரியுமா?

'த.வெ.க.வின் மாபெரும் சக்திமிக்க உடனடியான முன்னேற்றம் திராவிடக் கட்சிகளின் ஆட்சிகளை முடிவுக்குக் கொண்டு வந்து விட்டன' என்று ஆங்கில நாளேடு தலைப்பிடுகிறது.

'திராவிட ஆட்சியைத் தகர்த்த விசில்' என்று 'வெல்க தமிழ்' நாளேடு தலைப்பிடுகிறது. 60 ஆண்டுகள் தொடர்ச்சியை கையகப்படுத்தி விட்டார் என்று ஓர் ஏடு புளகாங்கிதம் அடைகிறது. திருத்திக்கொள்ளுங்கள் சென்னை இராஜதானியை சென்னை மாகாணத்தை சென்னை மாநிலத்தை தமிழ்நாட்டை திராவிட இயக்கம் 77 ஆண்டுகள் ஆட்சி செய்து இருக்கிறது.

ஜனநாயகத்தில் யார் வேண்டுமானாலும் வரலாம். வாக்களிப்பின் மூலம் வெற்றி பெறலாம். எப்போப்பட்ட மாபெரும் கொம்பன் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தாலும் 'எங்கள் வாசம்' இல்லாமல் ஆட்சி ஆள முடியாது. எங்களைப் பூண்டோடுஅழிக்கவும்முடியாது. தகர்த்துவிடவும் முடியாது. அரசியலின் நெடிய பக்கங்களில் சில 'விதூஷகன்கள்' நாடகங்கள் வெற்றி மாலை சூட்டிக் கொள்ளலாம். அதுவும் ஜனநாயக விதியானால் என்ன செய்ய முடியும்?

**கழகத் தலைவர் மக்களின் தீர்ப்பை ஏற்றுக் கொண்டார். தி.மு.க. எதையும் எதிர்கொள்ளும், கடந்து செல்லும், அதன் வரலாறு அப்படி. அக்கட்சி 114 ஆண்டு அரசியல் பாரம்பரியம் உள்ளது. தி.மு.க. நேற்று பெய்த மழையில் இன்று முளைத்த காளான் அல்ல. திராவிட மக்களை - தமிழர்களை தென்னக மக்களைக் காப்பாற்ற வந்த வீட்டு விளக்கு தி.மு.க; காட்டுத் தீ அல்ல. அதுவும் இலுப்பை எண்ணெயில் எரியும் 'பெரிய' அகல் விளக்கு, நின்று எரியும். எளிதில் அணையாது.**

**நடந்து முடிந்த தேர்தலில் திடீர் தீ விபத்தால் ஏற்பட்ட 'நாசம்' போல தி.மு.க.வை மக்கள் தோற்கடித்து இருக்கிறார்கள். இது ஓர் 'அரசியல் இடையூறு' என்றுதான் சொல்லவேண்டும். 1996 - 2001 ஆட்சியின் போது கலைஞர் முதல்வராக இருந்தபோது சாதனைகளைக் குவித்தார். ஆனால் 2001 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தி.மு.க.வைத் தோற்கடித்தனர். அதேபோல்தான் இன்றும். 2021 - 26 காலகட்டத்தில் ஸ்டாலின் சாதனைகளைக் குவித்தார். இன்று தோற்கடிக்கப்பட்டு இருக்கிறோம்.**

1957 முதல் 2026 வரை தி.மு.க. தேர்தல் களத்தில் பல ஏற்ற இறக்கங்களைச் சந்தித்து இருக்கிறது. வாக்கு சதவிகிதம் அதிகபட்சமாக 48.6 வரை பெற்று இருக்கிறது. அது ஆடாமல் அசையாமல் பயணித்துக் கொண்டு இருக்கிறது. புதுவெள்ளத்தில் மக்கள் நீராடுவதைப் போல சில ஏடுகள் செய்திகளின் மூலம் மக்களைக் குளிக்க வைக்கிறார்கள். தி.மு.க.வை இந்தத் தேர்தலில் வீழ்த்திவிட்டதைப் போலவும் தி.மு.க.வே சூன்யமாகிவிட்டதைப் போலவும் செய்திகளை வெளியிடுகிறார்கள். இது சரியா என்பதை யோசிக்க மறுக்கிறார்கள்.

நாடாளுமன்றத்திலும் சட்டமன்றத்திலும் ஒரு இடம் கூட இல்லாத காலம் இருந்தது நாடாளு மன்றத்தில் 39 இடங்கள், சட்டமன்றத்தில் 184 இடங்கள் இருந்த காலங்கள் உண்டு. கலைஞர் இங்கிருந்து கொண்டு தேசிய அரசியலையே கட்டமைத்தார். குடியரசுத் தலைவர்களையும் பிரதமர்களையும் உருவாக்கினார். தமிழ்நாட்டு அரசியல், தென்னக அரசியல் என்றும்

**க.திருநாவுக்கரசு**
திராவிட இயக்க ஆய்வாளர்

தி.மு.க.வின் கரங்களில்தான் இருக்கும். மத்தாப்பு அரசியல் இருட்டில் பளிச்சென்று இருக்கும். அதைப் பகலில் கொளுத்தினால் பார்த்து இரசிக்க முடியாது. இப்போதைய த.வெ.க. வெற்றி பகல் நேர மத்தாப்பு. இது போகப் போகத் தெரியும்.

**தி.மு.க.வின் அரசியல் என்பது அமைப்பு ரீதியானது. நிறுவன மயமானது. ஆவணமாய் குவிந்து இருப்பது. அதனுள்ளே கொள்கை படிமமாய் கிடக்கிறது. மத்தாப்பில் இதனைக் காணமுடியாது. கணநேரம் எரிந்து நின்றுபோகும். மத்தாப்பின் வெளிச்சத்தை டெல்லி இரசிக்கிறது. அவர்கள் இருட்டில் இருப்பதை அவர்களால் உணரமுடியவில்லை. தி.மு.க. ஆட்சியிலிருந்து போயிற்றா? - என்றே பார்க்கிறார்கள். அப்படியானால் நாம் - தி.மு.க.வினர் நமது கொள்கைகளில் எவ்வளவு கறாராக இருக்கிறோம் என்பதைத்தானே இது காட்டுகிறது.**

திராவிட இலட்சுமி என்கிற ஓர் அம்மா நமது இயக்கத்தின் மீதும் தி.மு.க.வின் மீதும் பற்றுள்ளவர். 'Instagram' இல் ஒரு செய்தியைத் தி.மு.க.வினருக்கு ஆறுதல் படுத்தி கூறுகிறார். அழுதுகொண்டே சொல்கிறார். அதன் கருத்தாவது:

"தலைவர் ஸ்டாலின் கடுமையாக உழைத்தார். பல சாதனைகளைப் புரிந்தார். சுற்றிச் சுற்றி வந்தார். ஓய்வே எடுப்பதில்லை. அவருக்கு 73 வயதாகிறது. பரவாயில்லை இப்போது ஓய்வு கொடுத்து இருக்கிறார்கள். நமக்குனு வேலைகள் இருக்கும். அதைப் பார்ப்போம். யாரும் அதைரியப்பட வேண்டாம். தைரியமா இருங்க.

அச்சம் என்பது மடமையடா

அஞ்சாமை திராவிடர் உடைமையடா"

என்று கழகத் தோழர்களை ஆறுதல் படுத்தி இருக்கிறார். இதை எமது மகள் மணிமேகலை எம்மிடம் காட்டினார். அப்படியே உருகிப் போனோம்.

அந்த அம்மையார் சொன்னது போல 'நமக்குனு வேலைகள் இருக்கு' அதை செய்வோம். **தி.மு.க. ஒரு பண்பாட்டு அரசியல் இயக்கம். ஆட்சியில் இருப்பது மட்டும் அதன் நோக்கம் அல்ல. அதுவன்றி, 'வர்ணமற்ற, சாதிகளற்ற, தமிழியல் சார்ந்த, பகுத்தறிவு சமதர்ம சமுதாயம் உருவாக' பாடுபடுவது நமது இலட்சியம். நமது அரசியல் பயணம் என்பது இதனை நோக்கியது தான். ஆகவே தி.மு.க.வின் அரசியல் அலைகள் ஓய்வதில்லை. இவை முன் கணநேர மத்தாப்புகள் என்ன செய்ய முடியும்?** ●

### தி.மு.க. கூட்டணியில் இருந்து

# காங்கிரஸ் விலகியதில் தி.மு.க. தொண்டர்களுக்கு மகிழ்ச்சி!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேட்டி!

சென்னை, மே 7 - தி.மு.க. கூட்டணியில் இருந்து பிரிந்து சென்று, த.வெ.க. கூடாரத்தில் தஞ்சம் புகுந்துள்ள காங்கிரஸ் கட்சியை தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கடுமையாக சாடி இருக்கிறார். எங்கள் கூட்டணியில் இருந்து காங்கிரஸ் விலகுவதில் எங்களுக்கு எந்த கவலையும் இல்லை என்றார்.

கூட்டணியை முறித்து கொண்டுள்ளது தொடர்பாக ராகுல் காந்தியோ, காங்கிரஸ் தலைமையோ தி.மு.க.வை தொடர்பு கொண்டு ஏதாவது சமாதானப்படுத்தினார்களா என்ற கேள்விக்கு பதில் அளித்த ஆர்.எஸ்.பாரதி, எங்களுக்கு அதை பற்றி கவலையில்லை, தலைக்குமேல் வெள்ளம் போனபின்பு, சாண் என்ன, முழம் என்ன. அவர்கள் கூட்டணியில் இல்லை என்றால் அவர்கள் இல்லாமல், அவர்கள் எதிர்த்தால் அவர்களையும் எதிர்த்து அரசியல் செய்வோம், கட்சியையும் நடத்துவோம் என்றார்.

காங்கிரஸின் இந்த முடிவு நாடு முழுவதும் இந்தியா கூட்டணியை பலவீனப்படுத்துமா என்ற கேள்விக்கு, இந்தியா கூட்டணியே தற்போது இல்லை, நாடாளுமன்றத் தேர்தலோடு அது முடிந்து விட்டது. நிதீஷ் குமார், மம்தா பானர்ஜி என ஒவ்வொருவராக சென்று விட்டார்கள். இந்தியா கூட்டணியில் இருந்தது நாங்கள் மட்டும் தான். அவர்கள் தான் இப்போது வெளியே செல்கிறார்கள். நன்றிகெட்டவர்கள் போகட்டும் என்று தெரிவித்தார்.

**திருவிளையாடல்களுக்கெல்லாம் காரணமானவர்கள்!**

தமிழகத்தில் பா.ஜ.க.வை தடுத்து நிறுத்தவே த.வெ.க.வுடன் செல்வதாக காங்கிரஸ் கூறுகிறதே என்ற கேள்விக்கு பதில் அளித்த ஆர்.எஸ்.பாரதி, இந்தத் திருவிளையாடல்களுக்கெல்லாம் யார் காரணம் என்பது விரைவில் வெளிச்சத்துக்கு வரும், அப்போது இப்படி பேசுகிறவர்கள் தலைகுனிந்து நிற்க வேண்டும் என்று கூறினார்..

## அதானே...

கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் எம்.எல்.ஏ. அவர்கள், சாலை விபத்தில் மறைந்த திரைப்படத் தயாரிப்பாளர் ஆர்.பி.சௌத்ரி அவர்களின் திருவுடலுக்கு, சென்னை மயிலாப்பூரில் உள்ள அவரது இல்லத்திற்குச் சென்று மாலை வைத்து மரியாதைச் செலுத்தினார். அப்போது நடிகர் ஜீவா உள்ளிட்ட அவரது குடும்பத்தாருக்கு ஆறுதல் தெரிவித்தார்.

சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் தாலுகா அரளிக்கோட்டையில் சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளர் முன்னாள் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தனது தந்தை பி.எல்.கருத்தான் நினைவு தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் திருமதி பிரேமா பெரிய கருப்பன் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.